செய்தி வெளியீடு எண் : 270 நாள் : 10.02.2024

<u>செய்தி வெளியீடு</u>

# மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களின் தலைமையில் 2024–25 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கை தொடர்பான கருத்துக்கேட்புக் கூட்டம்

வேளாண்மை உற்பத்தியில் தன்னிகரில்லா வளர்ச்சியை பெறுவதற்கும், உழவர் பெருமக்களின் வருமானத்தை அதிகரித்து, அவர்களின் நலன் காத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைகளுக்கிணங்க கடந்த 2021–22 ஆம் ஆண்டு முதல் வேளாண்மைக்காக தனி நிதிநிலை அறிக்கை வழங்கப்பட்டு வருகின்றது. நிதி நிலையினை தயாரிப்பதற்கு முன்பாக மாவட்டந்தோறும் உள்ள விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள், இடுபொருட்கள் விநியோகிப்பவர் சங்கப் பிரதிநிதிகள், விளைபொருட்கள் கொள்முதலாளர்கள், ஏற்றுமதியாளர்கள், விதை உற்பத்தியாளர்கள் போன்ற அனைவரிடமும் கருத்துக்கள் கேட்கப்படுகின்றது.

2024–25 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் பொருட்டு 2 முறை சென்னை தலைமைச் செயலகத்திலும், கடந்த 06.02.2024 அன்று தஞ்சாவூரில் டெல்டா மாவட்டத்தைச் சார்ந்த பிரதிநிதிகளுடன் கருத்துக்கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, இன்று (10.02.2024) மாண்புமிகு வேளாண்மை–உழவர்நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் டெல்டா மாவட்டங்கள் அல்லாத பிற மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகளிடத்தில் காணொளி வாயிலாக கருத்துக்கேட்புக் கூட்டம் வேளாண்மை இயக்குநரகத்தில் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளை வேளாண்மை இயக்குநர் திரு. பா.முருகேஷ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்கள், கருத்துக் கேட்புக்கூட்டத்தின் நோக்கம் குறித்து வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப. அவர்கள் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தை துவக்கி வைத்து பேசுகையில், ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை–உழவர் நலத்துறை நிதிநிலை தயாரிப்பதற்கு முன்பாக விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிந்து அதன்படி திட்டங்களை வகுத்து வருகின்றது. 2021–22 ஆம் ஆண்டில் 268 விவசாயிகளிடத்தும், 2022–23 ஆம் ஆண்டில் 382 விவசாயிகளிடத்தும், 2023–24 ஆம் ஆண்டில் 421 விவசாயிகளிடம் கருத்துக்கள்

கோரப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் 19 கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, விவசாயிகளின் 548 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த அரசு கிராமங்களை நாடிச் செல்லும் அரசாக இருந்து வருகின்றது என்பது விவசாயிகள் நன்கு அறிந்ததாகும். கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள விவசாயிகள் தங்களுடைய அனுபவத்தில் தங்கள் பகுதி விவசாயிகள் நலனிற்காக தேவைப்படும் திட்டங்களை தெரிவித்திட கேட்டுக் கொண்டார்கள். அரசு விவசாயிகளின் கருத்துக்களை நன்கு ஆராய்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2024–25ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையினை தயாரித்திடும் என தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர். இக்காணொளிக் கூட்டத்தில் ஏறக்குறைய 500 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் சர்க்கரைத்துறை ஆணையர் திரு.சி.விஜயராஜ்குமார், இ.ஆ.ப, வோண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் செயல் இயக்குநர். திரு. த.அன்பழகன், இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் வி. கீதாலட்சுமி, வேளாண் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் திரு. ஆர்.முருகேசன், விதைச்சான்றுத் துறையின் இயக்குநர் திரு.எல்.சுரேஷ் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in